இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 110 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 14 – வெள்ளிக்கிழமை 29 நவம்பர் 2024 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 110: Thiruvalluvar Year - 2055 - Karthigai 14 - Friday 29 November 2024 - Trichy ★★ 16 Pages ₹ 5.00






முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.11.2024) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் உள்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக இரண்டாம் நிலை காவலர்கள், சிறைத்துறை காவலர்கள் மற்றும் தீயணைப்பாளர்கள் ஆகிய பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 3359 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 1000 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். உடன், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் ஆகியோர் உள்ளனர்.

## மக்களைக் காப்பாற்றும் காவல்துறைக்கு என்றும் பக்கபலமாக இருக்கும் அரசு இது!

# ‘திராவிட மாடல்’ ஆட்சி காவல்துறைக்குப் பொற்காலம்!

### புதிதாகத் தேர்வான காவலர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு – வாழ்த்துரை!

**சென்னை, நவ.29-**

**சென்னை, கலைவாணர் அரங்கத்தில் உள்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், புதிதாகத் தேர்வான காவலர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கி, பாராட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், “மக்களைக் காப்பாற்றும் காவல்துறைக்கு என்றென்றும் பக்கபலமாக இருக்கும் அரசு இது” என்றும் ‘திராவிட மாடல்’ ஆட்சி காவல் துறைக்குப் பொற்காலம்” என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.11.2024) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் உள்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக இரண்டாம் நிலை காவலர்கள், சிறைத்துறை காவலர்கள் மற்றும் தீயணைப்பாளர்கள் ஆகிய பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள 3359 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 1000 நபர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.11.2024) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் உள்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக இரண்டாம் நிலை காவலர்கள், சிறைத்துறை காவலர்கள் மற்றும் தீயணைப்பாளர்கள் ஆகிய பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 3359 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

காவல்துறையினர் என்றால் யார் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை சொல்லி, உங்களை வரவேற்க விரும்புகிறேன். தங்களால் உருவாக்கப்படாத பிரச்சினைகளுக்கு, தீர்வு காண வேண்டியவர்கள்! முரண்பாடு ஏற்படும் இடங்களில், முதல் ஆளாக நிற்க வேண்டியவர்கள்! எல்லா விதங்களிலும் சகிப்புத்தன்மையுடன் நடக்க வேண்டியவர்கள்! உள்ளக் கொந்தளிப்பு அடையாமல் பற்றற்ற அமைதியுடன், நடந்துகொள்ள வேண்டியவர்கள்! பெற்ற சிறந்த பயிற்சிக்கு ஏற்ப கடமையுணர்ச்சி மிக்கவர்களாக, இருக்க வேண்டியவர்கள்! இப்படி இன்ப, துன்பங்களைத் துறந்து, ஊண், உறக்கம் மறந்து, கடமை – கண்ணியம் – கட்டுப்பாடோடு பணியாற்ற வந்திருக்கக்கூடிய காவலர்கள் அனைவரையும் வருக, வருக என நான் வரவேற்கிறேன்.

165 ஆண்டுகள் பழமையும், பெருமையும் மிக்க தமிழ்நாடு காவல்துறையில், நீங்கள் எல்லோரும் அடியெடுத்து வைக்கிறீர்கள். அதற்காக முதலில் என்னுடைய வாழ்த்துகள்!

**உலகளவில் சிறந்து விளங்கும் நம் காவல்துறை!**

நம்முடைய ‘திராவிட மாடல்’ அரசை பொறுத்தவரைக்கும், காவலர்களைப் போற்றும் அரசாக, காவல்துறையில் இருப்பவர்களுக்கு பல நலத்திட்டங்களை நிறைவேற்றித் தரும் அரசாக, நேர்மையாக, திறமையாக செயல்பட்டு மக்களைக் காப்பாற்றும், காவல்துறையினருக்கு பக்கபலமாக இருக்கும் அரசாக அமைந்திருக்கிறது. அதனால்தான், இந்தியாவிலேயே ஏன், உலக அளவிலேயே ஸ்காட்லாந்து யார்டுக்கு இணையான காவல்துறையாக, தமிழ்நாடு காவல்துறை விளங்கிக் கொண்டிருக்கிறது! அதை யாரும் மறுக்கமுடியாது.

அதன் அடையாளமாகதான் சமீபத்தில் ‘குடியரசுத் தலைவர் கொடி அங்கீகாரம் காவல் பதக்கம் 75ஆவது ஆண்டு விடுதலை நாள் விழா பதக்கம் – தமிழ்நாடு காவல்துறையில் மகளிர் இணைந்து பணியாற்றுவது பொன்விழா கொண்டாட்ட பதக்கம் என்று வழங்கி, தமிழ்நாடு காவல்துறையில் செயல்படும் அனைவரையும் பாராட்டியிருக்கிறோம்! ஊக்கப்படுத்தி இருக்கிறோம்! இன்னும் சொல்லவேண்டும் என்றால்,

**தொடர்ச்சி 3ஆம் பக்கம்**

## பெரியார் – அண்ணா – கலைஞர் நினைவிடங்களில் மரியாதை! துணை முதல்வர்

# உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்! எழுச்சிமிகு விழா!

### பல்லாயிரக்கணக்கானோர் திரண்டு வாழ்த்து!

**சென்னை. நவ. 29-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் தமிழ்நாடு முழுவதும் தி.மு.க.வினரால் உற்சாகமாக கொண்டாடப்பட்டது.**

**இந்நிலையில், பசுமை வழிச்சாலையில் உள்ள முகாம் அலுவலகத்தில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, தி.மு.க. பொதுச் செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் மற்றும் பேரவைத் தலைவர், அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள், நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் உள்ளிட்டோர் நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தனர்.**

**முன்னதாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், முதல்வர் மு.க.ஸ்டாலின், திருமதி துர்கா ஸ்டாலின் ஆகியோரிடம் வாழ்த்துப் பெற்றார்.**

**தொடர்ந்து தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.**

கழக இளைஞர் அணிச் செயலாளரும் - தமிழ்நாட்டின் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் நேற்று முன்தினம் (27.11.2024)

**தந்தை - தாயிடம் வாழ்த்துப் பெற்றார்!**

தனது பிறந்தநாளை முன்னிட்டு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது தந்தை - கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தாய் திருமதி துர்கா ஸ்டாலின் ஆகியோரிடம் வாழ்த்துப் பெற்றார்.

அப்போது கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

தந்தையின் வாழ்த்துப் பெற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

**தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - கலைஞர் நினைவிடங்களில் மரியாதை!**

அதனைத் தொடர்ந்து பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

**இனமானப் பேராசிரியர் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி!**

அதனையடுத்து இனமானப் பேராசிரியர் அவர்களின் இல்லத்திற்குச் சென்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேராசிரியர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்தினார். அப்போது பேராசிரியர் அவர்களின் புதல்வர் அன்புச் செல்வன், அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ. துணை முதல்வரை அன்புடன் வரவேற்றனர்.

**திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வாழ்த்து!**

வேப்பேரியில் உள்ள தந்தை பெரியார் நினைவிடத்தில் மரியாதை செலுத்திட வருகை தந்தபோது திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்கள் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு

**தொடர்ச்சி 4ஆம் பக்கம்**



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை அவரது பிறந்தநாளில், சென்னை ‘குறிஞ்சி இல்லத்தில்’ உதகை – படுகர் இன மக்கள் ஏராளமானோர் சந்தித்து, வாழ்த்துத் தெரிவித்தார்கள். அப்போது படுகர் இன மக்கள், உதயநிதி ஸ்டாலின் அவர்களை, தங்களது தலைப்பாகை உள்ளிட்ட பாரம்பரிய உடையினை அணிந்துகொள்ளச் செய்து மகிழ்ந்த காட்சி.